593

உ

கணபதிதுணை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1912

# ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி
# உர்ப்பவபுராணசரித்திரம்.

593
3.12

இதில்,
ஸ்ரீ பர்வதமகாராஜன் சரித்திரமும்,
தத்துவகுலஞான போதினியும்
அடங்கியிருக்கின்றன.

இவை,
செஞ்சிதாலுக்கா-மேமலையனூர்-கிராமம்
மணியம் ம-ா-ா-ஸ்ரீ,
வீ-மே-சந்திரருதனையநார் ஆவர்களும்
செஞ்சி-ம-ா-ா-ஸ்ரீ,
மேஸ்ரட்டாரவர்களும்
வேண்டுகோளின் படி.

மலையனூர்-ஆலயஸ்தானிகர்
வீரப்பஉபாத்தியாயரவர்களால்
இயற்றப்பட்டதை,

ஷை சந்திரருதனையனூர் ஆவர்களால்
பார்வையிடப்பட்டு,

சென்னை,
ஜீவகாருண்யவிலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

[illegible]லை] — [அணா 2.

1912.

Q25
MD
147062

உ

கணபதிதுணை.

ஸ்ரீ அங்காளபரமேஸ்பரி

# உர்ப்பவபுராணசரித்திரம்.

இதில்,

ஸ்ரீ-பர்வதமகாராஜன் சரித்திரமும்,

தத்துவகுலஞான போதினியும்

அடங்கியிருக்கின்றன.

இவை,

செஞ்சிதாலுக்கா-மேமலையனூர்-கிராமம்

மணியம் ம-ா-ா-ஸ்ரீ,

வீ-மே-சந்திரனுதனையநார் அவர்களும்

செஞ்சி-ம-ா-ாஸ்ரீ,

மேஸ்ரட்டாரவர்களும்

வேண்டுகோளின்படி.

மலையனூர்-ஆலயஸ்தானிகர்

வீரப்பஉபாத்தியாயரவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை சந்திரனுதனையனூர் அவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை,

ஜீவகாருண்யவிலாசம் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

593
3.12



உ

கணபதி துணை.

# ஸ்ரீ அங்காளிப்புராண சரித்திரம்.

---

விநாயகர் துதி.

பொங்கிவரும் ஆலமதை புசித்தமரர் பயம்தவிர்த்த பூதநாதன்
யெங்குமிறை யாம்பொருளாம் சாட்சாது பரமசிவ னீன்றபாலன்
மங்கைவல் லபைநேயன் கஜமுகனை யென்னாளு மனதிலூணி
அங்காளி சரிதைதனை அகிலமெலாம் கொண்டாட அரைகுவேனே.

---

இதனடியில் செஞ்சி தாலுக்கா மேமலையனூர்
ம-ா-ா-ஸ்ரீ, மணியம்
சந்திரநாத நயினருக்கும்,
திருவண்ணாமலை தாலுக்கா
ராதாபுரம் கிராமத்திலிருக்கும்
வீரப்ப உபாத்தியாயருக்கும்,

## வினா விடை.

---

மலையனூர் ம-ா-ா-ஸ்ரீ, சந்திரநாதநயினர் வினா.

ஆம்? வீரப்பஉபாத்தியாயரே.—

நான் உம்மை சிலநாளாய் யெதிர்பார்த்துக்கொண் டிருந்தேன் அது எனென்றால், சிலகேழ்விகளை அம்மன்விஷயத்தைப்பற்றியும் கேழ்க்க விருப்பங்கொண்டேன் ஆதலால், உர்ச்சவகாலங்களில் வந்தால் கொஞ்சம்நாளையில் யிருப்பிடம்போய்விடுகிரீர் ஆகையால் சந்தர்ப்பப்படவில்லை, இது தவிர இரண்டுமூன்றுநாளாய் ம-ா-ா-ஸ்ரீ, செஞ்சி மேஸ்ரட்டாரிடமும், ம-ா-ா-ஸ்ரீ, தாசில்தார் அவர்களிடமும் உமது ஜாதிவரலாற்றைப்பற்றியும், அம்மன் வரலாற்றைப்பற்றியும், பிரசங்கித்ததாய் கேள்விப்பட்டேன். அதாவது யெனக்கொன்றும் புலப்படவில்லை அதனைவிபரமாய் எனக்குச்சொல்லவேணுமாய் கேழ்க்க ஆவல்கொண்டேன் இதுதான் மற்றோர்விசேஷமல்ல வென்றார்.

## ராதாபுரம் ம-வீரப்பஉபாத்தியாயர் விடை.

ஐய்யா நீரே கவனித்துகேழ்க்க ஆசைகொண்டபடியால் அடியேன்சொல்ல தடையென்ன, ம-ா-ா-ஸ்ரீ, மேஸ்ரட்டாரிடமும் ம-ா-ா-ஸ்ரீ, தாசில்தார் அவர்களிடமும் இன்றுமுதல் ஐந்துநாளாய் யெமதுகுலஜாதிவரலாரும் அகிலபுவன கர்த்தீபமாய்தோன்றிய ஸ்ரீ பராசத்தியின் வரலாரும், அத்தெய்வத்திர்க்கு நாங்கள் அடிமையான விபரமும் அதைநான் ஆதிமுதல் அந்தம்வரையில் பிரசங்கித்துவந்தேன். அதைநான் தங்களிடமும யிதின்வரலாற்றைச்சொல்ல மிகுந்தஆவல் கொண்டிருக்கிறேன். இப்போது அடியனால் தெரிந்தவரையில் சொல்லுகிறேன் இதை சற்றேகவனிப்பீராக.

ஸ்ரீமத் சுத்தாட்குண்ணிய சிவசுயம்புவினருளால் தோன்றிய பஞ்சபூதபௌதீகத்தின்கண் யிலங்கும் சதுர்யுகத்தில் ஆதி கிரேதாயுகத்திர்க்குமுன்னர் பராசத்தியின் திருவருளால் மணியுகமுடிந்து பிரளயகாலானுக்கிரவிதியின்படி பொர்ப்புதமென தோன்றிமறையும் யிப்பருவததில்விளங்கும் சைதன்னிய கிராமய சங்கர்ப்பத்தை பேசத் துணிவுகொண்டது யாதெனில்.

## சத்திவுற்பவ கவி.

யேகமெஜக ஜோதியாய் யிரேழும் வொன்றாகி யிருக்கும் நாளில்
அகவுனல் ஸ்தம்பமதில் அபிநயித்து சிலத்திடவே அதனில் தோன்ற
நாசமுறு அவையனலில் நருமணியும் சூலமுடன் நங்கை தோன்றி
யேகவெளி அண்டபெலாய் எங்கனும்ஓருருவாகி யெழுந்தா ளன்றே.

பருதியுமதியும் பாரினில்யில்லா பணிவரை திங்களும் பரவா
உருசியின் தபக்காயி வரிமைகள் யியத்து வத்தமிகூட்டமே யுகந்து
சருவிய மணியால் சதாசதகோடி தையுலர் தோன்றறிள் தனக்காய்
குறைவில்லை யென்று கோதைமாருடனே குலகெலாம் ஆண்டுமேயிருந்தாள்.

ஐயா இப்பூவுலகின்கண் மிகவும் சிறப்புற்றோங்கிய செஞ்சிதாலுக்காமே மலையனூர்கிராமத்தில் திருக்கோயில்கொண்டெழுந்தருளிய ஸ்ரீ, அம்பாள் அகிலபுவன ரட்சகியாகியும் அண்டபுவன சராசரங்களையும் படைத்தவளாகியும் விளங்கும் தயாநிதியாகிய பராசத்தியின் திருவருள் சிறப்பினை யான் ஆதி கிரேதாயுகத்திர் ஸ்ரீ சனனுமுனியாண்டவரால் திருவாய்மலர்ந்தருளிய சத்திபுராணத்தை அடியேன் தெரிந்த வண்ணம உரைசெய்ப யெண்ணங்கொண்டேன் யிங்கனம் யிதையாவ

ரும் அன்புபாராட்டி இப்பேதையால்வரும் புன்சொல்யாவையும் பரிகரித்து மற்றவைகளை அங்கீகரித்து ஆட்கொள்வீரென சிறியேன் வந்தனத்துடன் வணங்கிகேட்டுகொள்ளுகிறேன்.

இ ஃ து,

## சத்தியின் உர்ப்பவபுராண கவிகள்.

க வி.

ஓதமணி யுகமதனில் வுத்தமியாம் சத்தியவள் வுலகை யாண்டாள், பாதமதை ரிஷிமுனிவோர் பத்தியினுர் போற்றிசெய்து பகர்வார் மேலாய், நீதியுகம் நாலாக்கி நிரையுகம் அய்யாயிரமாய் நிரைந்துவோங்க, ஆரமுரும் பிர்ம்மாக்கள் அரசாளடு நூற்றொருவ ரழிவா ரென்றே.

இதன் பொருள்.

ஆதியில் யிவ்வுலகம் உருண்டையின்வடிவம் ஆகையால் அவ்வுருண்டைவடிவத்தில் அகிலபுவன ஆதாரகர்த்தீபமான திருபுரசவுந்தரியென்னும் ஸ்ரீ பராசத்தியானவள் அவ்வுருண்டையில் தோன்ற அதனால் உருண்டைவடிவமானது அபினயித்து நெக்கிட்டு படீலென்று அவ்வுருண்டைவடிவம் வெடித்து அதிலொன்று மேலண்டமாகவும் மற்றொன்று கீழ்பிண்டமாகவும் ஆயின, அதின்மத்தியில் கோடிசூர்யப்பிரகாசமும் யிடீல்லாதவளாய் நெத்திக்கண் திரிசூல மணிமந்திரத்துடன் பஞ்சமுகத்துடன் பராசத்தியானவள் தோன்றினள் இவ்விதம்தோன்றியகாலையில் சந்திரசூரியாளில்லை நாளும் நடசத்திரம் திதிவாரங்கள் யிவைகள்யாவுமில்லை அக்காலையில் தானே தானுய் தனியரசுசெய்து யுக்தமல்லவென்று ஆதலின் தனக்கு ஊழியங்களைச்செய்ய சில ஸ்ரீஜாதிகள்வரவேணுமென்று தன்னுடன்தோன்றிய மணிகளில் ஒன்றையெரிந்தனள் அந்தக்ஷணம் ஒன்பதுகோடிமாயா சத்திகள் உண்டாயினர் அவர்களால் தனக்குண்டாகிய ஊழியங்களிட்டு ஒருயுகம்கழிந்தனர் பிறகு அவர்களுக்கு பிரப்புமில்லை யிரப்புமில்லை, ஸ்ரீஜாதிகளே யேககூட்டமாதலால் வெழ்க்கநாணபாணமுமில்லை ஆதலால் ஒருயுகமரசாண்டு மருயுகத்தில் புருஷாள்வேண்டுமென்கிறயெண்ணமாய் ஒருமணியையெரிந்து மயேசுரனைப்படைத்தனள். அப்படிபடைப்பினுல்வந்த மயேஸ்வரன் தன்னைபடைத்தவள் தாயெனக்கருதி ஜெசஜோதியாய்விளங்கும் பராசத்தியின் தாமரைகமலங்களில் வணங்கியேற்றி போற்றிப்பணிந்தனர் அப்போது பராசத்தியின் மனம்வேறாய் நாம்புருஷனுகவரவேண்டுமென்கிற யெண்ணமாய் படைத்தோம் இவர் அதுகளையெண்ணுமல் பாதம்பணிங்

தமையால் கோபத்தணல்கொண்டு நெற்றிக்கண்திரக்க மயேசுரன் பஸ்மீகரமாய் அங்குள்ள பெண்கூட்டத்துடன் யெரித்தனள் பின்பு தானும் ஜலப்பிரளயமாகினள், இப்படியொருயுகம் சென்று பின்போரெண்ணமாய் உருக்கொண்டெழுந்து யின்னமோர் மணியெரிந்து சதாசிவத்தைப்படைத்னள் அன்னவரும் உலகமெங்கும் வொளிவோங்கிடநின்ற பராசத்தியைக்கண்டு தாயெனக்கருதி பாதம்பணிந்தார் அவரையும் நமதுகருத்திற்கிசையவில்லை என்று நெத்திக்கண்ணெலிரித்து தானும்கோபாக்கினியால் பாரென்னும்பூமியாய் எங்கும் நிரைந்துநின்றாள்.

அப்பூமியானது ஜலத்தின்மீது நிர்க்கஜலம் பூமியைத்தாங்கமுடியாமலழுந்தியதால் பராசத்தியானவள் சற்றுயோசித்து அதனைதாங்க அஷ்டதிக்கிர்க்கும் அஷ்டகுலபருவதங்களை தாங்கனிர்மித்தாள் அதுவும் தாங்காமையால் அஷ்டநாகங்களை தாங்நிமிர்த்தாள் அதுகளும் தாங்காமையால அஷ்டகெஜங்களை உண்டுசெய்து அதனைதாங்க ஆக்யாபித்தாள் இவையனைத்தும் கூடியும் தாங்கப்படாமையால். பராசத்தியின் மனம் வேராப்கலங்கி பின்போர்யுகத்தினல் தனது சடாபாரத்திலுற்ற ஓர்குழலை யெடுத்து இஃதோர் ஆயிரம்பணமுடியுடைய ஆதிசேஷனென்னும்பாம்பாய் வரக்கடவையென்று நினைந்தனள் அவ்விதமே அமைந்துவந்தபடியால் அதனையிவையாவற்றிற்கும் நடுமத்தியிலிருவென்றனள் பூமி பின்பு இதனல் அசைவற்றிருந்தன அதன்பின்மூவுலகங்களைப் படைத்தனள் மூன்றாவதுயுகத்தில் ருத்திரமூர்த்தியைபடைத்தாள் அவரும்அம்மனது யெண்ணத்திர்க்கிசையாமல் தாயெனப்பணிந்தனர் அவரையும் முன்போலவே யெரித்தனள் நான்காவதுயுகத்தில் பிர்ம்மனைபடைத்தாள் இவரும்பணிந்தமையால் இவரையும்யெரித்தாள் பின்பு ஐந்தாம்யுகத்தில் நாம்கோரியயெண்ணம்யாவும் பயன்படவில்லையேயென்று துக்கசாகரத்தில் மூழ்கினவளாய் ஒருவாறு மனம்தேரி தனதுநெத்திக்கண்ணமுசத்தில் கொஞ்சம்யெடுத்து கபடநாடக சூஸ்த்திரதாரியான கண்ணனுகிய ஸ்ரீமகாவிஷ்ணு வரக்கடவதென்றாள். அவ்வண்ணம் ஸ்ரீகண்ணபிரான் திருவுருவாயெழுந்து பராசத்தியைப்பணியாமல் அன்னவளைநோக்கி யிவ்விடம்எரிததனிராகிய சாம்பல்யிருக்கும்விதம் யென்னவென்றார்

யான் உமக்குமுந்தி நான்குமூர்த்திகளைப்படைத்தேன் அவர்கள் என் மனத்திர்க்கிசையாமையால் அவர்களையெரித்த நீரென்றாள் ஆகிலும் நல்லது அவர்களையெழுப்புவையேல் உனதுஇஷ்ட்டம்போல் நடக்க தடையிராதென அம்மன்பேதமைகுணத்தால் மயேசனையும் சதாசிவத்தையும்நீக்கி ருத்திரமூர்த்தியும் பிர்ம்மனையும் யெழுப்பினள ருத்திரமூர்த்தியானவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சூதால் தருவினதே நண்டிதையலேயென்றார் அப்போது அம்மனுக்கு ஆனந்தசந்தோஷம்கொண்டு நீர்யெனது மனதுபோல் கூரியபடியால் நீர்தான் புருஷன் வாருமென்றாள். அவர் புருஷனாகவேண்டுமென்கிற யெண்ணமிருந்தால் உன்னிடமிருக்கும் நெத்திக்கண் திரிசூல மணிமந்திரங்களை அவரிடம்கொடுத்தால் காரியம்சித்தியாகுமென்றார் அன்னவள் புருஷனாசைக்காக யாவையுமளித்துவிட்டனள் யிவையாவையும் பெற்ற ருத்திரமூர்த்தியானவர் நம்மைப்படைத்தபோது தாயாகிவிட்டாள் அவளது கருத்தின்படி நடக்கத்தகாதென நினைந்து கண்ணன் அன்னவளை எரித்துவிடுமென்றார், தான்பெற்ற நெற்றிக்கண்ணால் உற்றுநோக்கி பராசத்தியையெரித்துவிட்டனர் யெரிந்தசாம்பலை விஷ்ணுவானவர் ஓர்பிடியள்ளி அதை ருத்திரமூர்த்தியின் கரத்திலிட்டு யென் தங்கையாகிய உமையவளை உமக்குத்தந்தோமென்றார் பின்பு ருத்திரமூர்த்தி அன்னீரில்ஓர்பிடியள்ளி யென்தங்கையாகிய செந்திருவை உமக்களித்தேனென்று, விஷ்ணுகரத்திலிட்டார் அக்காலையில் அருகிலிருந்த பிர்ம்மன் யெனக்குயாதொன்றுமில்லையோ வென்றான். எங்கள் கரத்தாலளிக்கலாகாது நீரே அச்சாம்பலையள்ளி நாவில்போடென அவ்வாரேசெய்ய அவரிடநாவில் சரஸ்பதியுண்டாயினள் ருத்திரமூர்த்திக்கு பார்வதியும் விஷ்ணுவுக்கு லக்ஷுமியும் பிர்ம்மனுக்கு சரஸ்பதியுமாய்வர இவர்கள் சதிபதியுடன் முன்னம் உமையவளால் யேர்ப்பட்ட சத்தியோகம் வைகுந்தம் கயிலாயத்தை யடைந்து தொழிலங்தில் சிருஷ்ட்டி திதி சங்காரமென்னும் முத்தொழிலை நடாத்திவருகின்றனர் மற்றுயிரண்டென்னும் சிரோர்ப்பவம அனுக்கிரகமென்னும் இவ்விரண்டு தொழிலும் முன்னமெரிந்து அருரூபியாய்யிற்கும் மயேஸ்வரன் சதாசிவத்தையடைந்தது அவர்களால் யித்தொழில் நடாத்தப்பட்டு வருகிறது தவிர ருத்திரமூர்த்தியானவர் பராசத்தி

யிடமிருந்த மணிமந்திரம் நெத்திக்கண் திருசூலங்களைகிரிகித்து பரா சத்தியை நெத்திக்கண்ணுலெரிக்க வுத்துநோக்கியபோது இரண்டு பொரிகள் சிதரிக் ககனமார்க்கமடைய அஃது யிரண்டும் சந்திர சூரியர்களாயின இப்பரதகண்டத்தில் அம்மன் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி பருசத்தி ஆதிசத்தியென ஐந்துஅவதாரமாகினுள் ஆரு வதுதக்கனிடம்போய்பிரந்தாள் பின்புதக்கனென்னும் தக்ஷகபிர்ம்மன் கொண்ட மமதையை வீரபத்திரசுவாமியாலழிக்கப்பட்டு அம்மன்தக்கன் செய்தயாகத்தில் வீழுநது மரைந்தாள் பின்பு ஜலத்துடன் ஜலமாய் கரைந்துநின்றுள் இதுநிர்க்க.

அய்யா இந்தசக்த்திபுராணமானது வடமோழியினுலுண்டானது ஆதரணவேதத்தில்சார்ந்த ஸ்ரீ அங்காளிபுராணத்தில்லருசர்க்கம்தான் இதுவரையிலும்சொன்னேன் இன்னம் பதினேழுசர்க்கம் இருக்கின்றது இனிஇரண்டாம்பாகத்தில் ஸ்ரீபரவதராஜனுடைய உற்பவத்தையும் அவ்வரசனுக்கு முந்தி மூலபுருஷன் திருமால்முதலானவர்களால் மேற்படியரசனுக்கு சாபம்வாய்த்தது முதல் இக்கலியுகத்தில் அவ்வம்சத்தவர்களாகிய தத்துவகுலசிகாமணிகளுக்கு கிடைத்தசாபமும் இக்கலியுகத்தில் துலைக்கநேர்ந்தவரையிலும் விபரமாகசொல்லத்துணிவு கொண்டு பிரசுரிக்கின்றேன் இதையாவரும் கொஞ்சம் கவனம்வைத்து கேழ்ப்பீராக.

ஸ்ரீ அங்காளிப்புராணம் முதல்சர்க்கம்
முற்றும்.

உ

கணபதி துணை.



ஸ்ரீ பர்வததமகாராஜன்

# சரித்திர வாலாறு.

(இரண்டாம்பாகம்.)

கவி.

மணியுகமதனில் மாயவன்திருவை மருவிமேய யணைந்திடும்காலே
அணிகுழலீன்று மருகுமாமுனியும் அருங்கிரையதுவினி லாண்டார்
பணிகுரேர்சன் யிருயுகமதனில் பரவதநாண்டனன் பாரை
மணிகதிர்மூன்றும் யுகமும்மைமநாகன் மன்னனும்அரசது புரிந்தான்.

## இதன் பொருள்.

ஐயா! ஆதி கிரேதாயுகத்தில் தேவர்களும் ராக்ஷதர்களும் திருப் பார்க்கடலில் அமுர்தம்கடைந்தகாலேயில் ஸ்ரீ மகாலட்சுமியானவள் பிரந்தாள். அன்னவள் ஸ்ரீமகாவிஷ்ணுவைநோக்கி தபம்செய்ய அம் முரைக்கிறங்கிய வைகுர்தவாசன் காட்சியாகி பூசுரவடிவமாய்வந்து ஸ்ரீமகாலட்சுமியை கூடியணைய ஓர்முகூர்த்தநாழிகையில் மருகுமுனி யென்னும் புதல்வன் தோன்றினன், அவர் கிடதாபுரிக்கிரைவனாகி அரசாக்ஷிசெய்திருக்கையில் உத்திரதிசைக்திபனுகிய குபேரன்மகள் சவுலாங்கனியை திருக்கலியாணஞ்செய்ய அவளிடம் ஸ்ரீபருவதமகா ராஜனென்னும் ஓர் புத்திரன்தோன்றினர், அவருக்கு வருணராஜன் மகள் மேனுவதியை கலியாணம்செய்ய அவளிடம் மைநாகபருவதன் என்னும் ஓர் புதல்வன் பிரந்தான், பின்பு பருவதமகாராஜன் ஓர் பெண்பால் வேண்டுமெனக்கருதி ஓர்யுகம் அக்கினியில் பறுசத்தியை வேண்டித் தபம்செய்ய அப்போது முன்தக்கன்யாகத்திலழிந்திய உமாபதியானயீஸ்பரி மனங்களிகூர்ந்து ஆகாயத்தில் அசரீரியாக உமக்கு மகவாகவருகிறேனென்றுகூறி அக்கினியில்நின்று தபம்செய் யும் மேனுவதியம்மன்மடியில் குழவிவடிவமாகி அழுகையில் பருவத மகாராஜன் சந்தோஷமடைந்து தன்நகர்க்கு மகவையேந்திவந்து அன்போடுவளர்த்து :ஸ்ரீகைலாசபதியான பரமசிவனுக்கு திருக்கலி யாணம்செய்துவைத்தனர். பின்பு மைநாகப்பருவதனுக்கு சௌமன் னியமுனிவர்மகள் சண்பகாவதியைக்கலியாணம்செய்துவைக்க அவள் வயற்றில் தொண்ணூத்தியாருபிள்ளைகள் பிரந்தனர். இதுநிர்க்க,

முன்பு தேவர்களும் ராக்ஷதர்களும்கூடி அமுர்தம்கடையையில் தேவர்களும் ராட்சதர்களும் மந்திரகிரியை வோர்மத்தாகவும், வாசு கியென்னும் சர்ப்பத்தை ஓர்கயிராகவும், ஆழியென்னும் திருப்பார்க் கடலே ஓர்ஜாடியாகவும் நேமித்து தேவர்கள் வால்ப்புரமாயும் ராட்ச ததாள் தலேப்புரமாகவும் வாசுகியைப்பற்றியிழுக்கையில் வாசுகியெ ன்பவர் அவ்வருத்தும்தாங்கமுடியாமல் விஷத்தைகக்கிவிட்டனர் ஆத லால் தலையைப்பற்றியிழுத்த ராட்சதரில் ஐநூறுவெள்ளம்ராட்சதர் அவ்விஷத்தினுல் மடிந்தனர், அக்காலேயில் அமுர்தம்கிடையாமல் தடைப்பட்டுநின்றுவிட்டன. பின்பு வோர்யுகப்சென்று மருயுகத்தில் விஷ்ணுவானவர் யாவரையும்சமப்படுத்தி யின்னமோர்தரம் அமுர்த ம்கடைந்து அதைஉண்பீராகில் யெக்காலமும் நீங்களனைவரும் சாவி ல்லாவரம்பெரலாமென்ன யாவரும் ஆசைமேர்க்கொண்டு மறுபடியும்

கடையுங்காலையில் தேவாமிர்தம்பொங்கியெழுந்தன, அதைஓர்பொற் கலையத்திற்பிடித்து யாவருக்கும பகர்வோம் தேவர்கள் ஓர்புரமும் ராட்சதர்கள் ஓர்புரமும் வரிசைகிரமமாய் உட்காரச்செய்து யிவ்வமு ர்தத்தை யாருல்பரிமாறுவதுயென்று வைகுந்தவாசன்கேழ்க்கையில் ராட்சதர்கள் யிங்குள்ளோரில் யாவரும்பகரக்கூடாதென்றார், அப் போது விஷ்ணுவானவர் ககனமார்க்கத்திலிருந்தோர் கன்னிகையை வரச்செய்வேன் அவளால்பகர உமக்குச்சம்மதமோவென சரியென்று யாவர்களும்சம்மதித்தார், அவர்களெண்ணம்போல ஸ்ரீமகாவிஷ்ணு வானவர் யிங்கிருப்பதுபோல் மாயமோகினியாய் வடிவம்கொண்டு ஆகாயமார்க்கமாயிருந்து யிரங்கினுள். இவ்விதம்யிரங்கிடக்கண்ட தா னவர்கள் அக்கன்னியின்மீதில் மிகுந்தக்காதல்கொண்டவருய் மங்கை மீதில் விழியைகாட்டிக்கொண்டேயிருந்தார்கள், தேவர்களோ அவ்வி தயெண்ணமில்லாதவருர் அமுர்தம்கிடைத்தால்போதுமென்கிற யெ ண்ணமாயிருந்தனர். அப்போது ககனமார்க்கமிருந்துவந்த மாயமோ கினியிடம் இந்தபொற்கலயத்திலிருந்த அமுர்தத்தை மகாவிஷ்ணுவா னவர் அளித்து யிதையாவருக்கும் சமமாய் வஞ்சனையில்லாமல்பக ரும் கன்னியேயென்று யாவருக்கும்தெரியும்படிசொல்லிவிட்டு பின்பு மாயமோகினியாய்வந்த விஷ்ணு தேவரணியில்சென்று யாவர்களுக் கும்பகர்ந்துவக்தனள். அதுசமயம் இராகுவென்னும் அரக்கரில் ஒரு வன் யிதுவென்னவித்தை நம்மையேமாற்ற யெண்ணம்கொண்டவள் போல் காணுகிறதென்றுநினைந்து ஒரு தேவனைப்போல்வடிவம்கொ ண்டு தேவர்கூட்டமோடுசேர்ந்து தானும் கையேந்திநிர்க்க, அதைக் கண்ட மாயமோகினியாய்வந்த மகாவிஷ்ணு தனதுகையில்பற்றியிரு ந்த கரண்டியால் அவ்வரக்கன்தலைகிழிய மோதினள், அவ்வமுர்தக்க ரண்டி மேல்பட்டவுடன் சாவில்லாதவராய் இராகு கேதுவென யிரு கோளாயினர் பின்பு கன்னிகை தேவரணிக்குபகர்ந்து முடிவானவுட ன் உற்றுநோக்கி தான்தவிர மற்றொருவரும்காணுமல் அக்கலையத்தி லிருந்த அமுர்தம்யாவையும் மாயமோகினியாய்வந்த மகாவிஷ்ணு உண்டு அக்கன்னிகை ஆகாயமார்க்கம்சென்றனள்.

மோகினியானவள் நிசாசரருக்கு அமுர்தம்கொடாமல் வஞ்சித் தப்படியால் ராட்சதர்களுக்கு அடங்காதகோபத்தணல்மீறி ரவுத்ரா காரமாய் அதிககோபங்கொண்டு அமுர்தங்கொடாமல் வஞ்சிக்கயெ ண்ணம்கொண்ட யீனராகிய தேவர்களை நாம்சும்மாவிடுவதில்லையென பர்க்களை நெரநெரவெனக்கடித்து மீசைகள் படபடவெனத்துடிக்க கோடைகாலபிடியெனகெர்ச்சித்து தேவர்கள்மீதுபாய்ந்து யுத்தசன்

யுத்தராய் புடைக்கத்தலைப்பட்டார்கள். தேவர்கள் அமுர்தம்உண்டவர்களாதலால், வலுமிகுத்து ராக்கதரைதள்ளிவாட்ட யாவரும் நடுகடுங்கியெதிர்நின்று சண்டைசெய்யமுடியாமல் சமுத்திரத்தில் மட்சஉருவங்கொண்டு மறைந்திருந்தனர்.

இப்படியொருயுகம்சென்றபிறகு மருயுகத்தில் இராக்கதர்யாவரும் கும்புகூடி நமக்குஅமுர்தங்கொடாமல் வஞ்சித்த யீனராகிய தேவர்களை நாம்சும்மாவிடத்தகாதென யோசித்து பகல்முழுவதும் மட்சமாய்மறைந்திருந்து இராத்திரிகாலத்தில் தேவர்கள்மீதில்யுத்தஞ்செய்யத்தலைப்பட்டு ஆயிரம்சிறம் இரண்டாயிரம் அஸ்தத்துடன் கோரரூபங்கொண்டு தேவர்களை தலைவைத்துபடுக்கவொட்டாமல் அடித்துக்கொல்லுகையில் தேவர்கள்பயந்து பரமசிவனிட தெய்வசபையில் முறையிட்டலர பரமசிவம் பிரம்மா மகாவிஷ்ணு இவர்கள் மூவரில் மகாவிஷ்ணுவானவர் எனதுபேரனாய் விளங்கும் நிசிதபுரியையேகசக்ரேசனாய் அரசாளும் ஸ்ரீபரவதமகாராஜநிடம் முறையிடில் உமதுமனக்குறைகள்யாவும் தீருமென, அப்போது ஸ்ரீபருவதமகாராஜநிடம் தானவராகிய தேவர்கள்சென்று முறையிட அவ்வேந்தன் யிச்சங்கதியொன்றுமரியாதவராய் முன்பின்யோசியாமல் அபயஸ்த்தம்தந்துஉங்களை ஆதரிப்பேனென்றார். பின்பு தேவர்கள்பயம்தெளிந்து நடந்த விர்த்தாந்தங்களை செல்ல பருவதராஜன்கேட்டு அய்யய்யோ யிதென்ன விபரீதம் யான்யிதர்க்கென்னசெய்வேனென்று திக்கித்து யாதொன்றும்தோன்றாமல் சாட்சாத்கரமாய்விளங்கும் தனதுமருமகனாகிய பரமசிவனிடம்போய் முறையிட்டலர பரமசிவம்களிகூர்ந்து வ அரசே நீர் யெந்தகாரியர்த்தையெண்ணி செய்யமுயன்றாலும் அக்காரியம்யாதும் குறைவின்றி நடந்தேரிவரக்கடவதென்று வரம்பாலித்தனர்.

இவ்விதம் வரம்பெற்று அரசன் தன்னகரம்சேர்ந்து மந்திரிகளுடன் ஆலோசித்து விஸ்வப்பிரமனை அதிசீக்கிரத்தில் அழைத்துவர தூதர்களுக்கு கட்டளையிட்டார் விஸ்வப்பிரம்மன்வந்தடிபணிய அன்னவனைநோக்கி எனக்கு இன்றோர்க்கவலைநேரிட்டபடியால் அக்கவலை நீக்கும்படி யுக்தி செய்ய உன்மைகருவித்தேனென அம்மொழியைக்கேட்ட விஸ்வப்பிரமன் சற்றுநேரம்யோசித்து இருக்கு எசர் சாமம் அதரணவமென்னும் நான்குவேதங்களையும் செப்புப்படாகநியமித்து பின்பு வலை அரியுருமாலாகியும் அமரரையடுக்காகவைத்தும் தூரியரை யிருபத்தியஞ்சளாகவைத்தும் சொல்லரிய மலைமகளை வெள்ளடிக்கண்ணாகவைத்தும், தம்பிரானுடைய திருத்தாழ்வடமே

அவ்வலைக்கு மணியாகவைத்தும், பத்திரகாளிசூலாயுதத்தை யுட்க்கயிராகவைத்தும், யெமனுடைய பாசக்கயிறை காலக்கயிறாகவைத்தும் அவ்வலையின் தலைப்பஞ்சாணே சிவனுடைய சன்னியாழிமோதிரமாயும் தேவர் முதல் மூவர்யாவரையும் ஓர்ஞானவலையாகபடைத்தார். இந்த அண்டமே ஒருவலையாகவும், நட்சத்திரமே ஒவ்வொருகண்களாகவும் அந்தஞானவலைக்கு துவாரங்களானது நாலுகோடி ஆறாயிரத்தியிருபத்திஐந்து துவரமுள்ளதாம் அவ்வலையை அரசன்முன்னிலையில் வைத்துப்பணிந்தார், அதைக்கண்டு அரசன் மிகவும்சந்தோஷமடைந்து மூவர்முதல்தேவர்யாவரும் படகின்பேரிலேறி ஆழியில்சென்று அந்த ஞானவலையைக்கரத்திலேந்தி ஸ்ரீபருவதமகாராஜன் வீச பதுங்கியிருக்கும் புலைகொலைகளவுகள் காமமென்னும் பஞ்சமாபாதகத்திற்குகொஞ்சமும் அஞ்சாமல் துணிந்துசெய்யும் தானவரைபிடித்து கரையிற்போட அன்னவர்கள்யாவரும் தரையில்நில்லாமற்குதித்தோட யிவ்வண்ணம் பருவதராஜன் ஐந்துநாள் இரவுபகல் அன்னம்நித்திரைசுகம் யாவையும்வெறுத்து பலவாரிலும்முயன்றும் பயன்படாமையால் தன் மகளாகிய பராசத்தியைநோக்கி மனம்வருந்திவேண்டுகையில் அம்முறைக்கிரங்கி ஸ்ரீஅகிலபுவனகாத்தீபமாய் தோன்றிய பராசத்தியானவள் அவ்வேந்தன்முன் காட்சியாயினள், வேந்தனால் சகலசங்கதியும் தெரிந்து கோரவடிவம்கொண்டு மேலுதடே அண்டமாகவும், கீழுதடே பிண்டமாகவும் கெர்ச்சித்துநின்று வாரும்தந்தையே என்வாயில் பிடித்து போடுமென்ன, வேந்தன் அவ்வாறே பிடித்துப்பிடித்துப் போட பட்சமாய்நின்றதானவர் அதமாகிட பயந்து மருகடல்சென்றொளிக்க அந்தும் இவர்சென்று கொல்லநினைக்கயில் அவ்விடத்தில் இரண்டு சதுர்யுகமாய் யோகசாதனத்திலிருந்த மீனமகாரிஷியினிடம் யாவரும்சென்று குப்புகூடி குமளியிட்டிருக்கையில் அவ்வதிசயத்தைக்கண்ட பருவதராஜன் அண்டஞ்சூழந்தவலையைவீசி யிழுக்கையில் அவ்விடம் தவத்திலிருந்த மீனமகாரிஷியுடன் யாவரையும் அவ்வலையானது சேர்த்துயிழுக்கையில் மேல்படி ரிஷியின் தவங்குலைந்து அங்குயிங்குமோடமுயன்று அவ்வலையிடங்கொடாமல் ரிஷியானவர் தலைப்பஞ்சாண்வழியாய் ஓடிவந்து உற்றுப்பார்க்கையில் அப்படையின் பேரில் ஆரகேயூரமணிமகுடத்துடன் செம்புப்படகின்பேரில் நிற்கக் கண்டு இன்னாரென்றறியாதவராதலால் அவ்விடத்தில் ஆடா செம்புப்படகா என்றார்.

அம்மொழியைக்கேட்ட அரசன் மிகவும்திடுக்கிட்டு சுவாமி! நான் பருவதமகாராஜன், தேவர்களிடுக்கந்தீர்க்க வந்தேனென்றார், அவர்

கடுங்கோபமாய் மீனமகாரிஷியானவர் அரனைப்பார்த்து நீர் சூரசம் மாரத்தொழிலுக்காசைப்பட்டு என் தவத்தைக் கெடுத்ததலைவன் நீராதலால் நாளதுவரையில் சூரசம்மாரமேசெய்து அந்தசூரராலேயேஜீவனஞ்செய்யக்கடவதென்று யிடிபோடொத்தசாபம் கட்டளையிட்டார் பின்பு அரசன் பலவிதம்வருந்தியும் பயன்படாமையால் தனதுமருமகனாகத்தோன்றிய பரமசிவனிடம்போய் முறையிடவும் பரமசிவம் நமது தென்கயிலாயமென்னும் திருவருணையில் நமதுபொன்மலைத் திருமுடியில் தீபம்சாற்றும்படியாய் வரமீந்தேனென்றார். இது தவிர அத்தினம் தீபதரிசனம்கண்டு யாவரும் அரோஹர அருணாசலாவென்று தோத்திரஞ்செய்யும் ஓர்நாளைய தீபதரிசனபலன் உமக்குதத்தம் செய்தேனென்றார், இவவரங்களைப்பெற்றுக்கொண்டு தன்மகளான பராசத்தியினிடம்போய் முறையமிட என்தந்தையே நீர்யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் நான்உன்மகவாக உதித்தவளாகையால் நான் இவ்வமுசத்தை கோடித்தலைமுறைவரையிலும் உங்களுக்கு குலதெய்வமாகயிருந்து காத்து ரட்சிக்கிறேனென்றனள்.

ஐயா அவர்கள் கலியில் சூரசம்மாரம்செய்வதையெல்லாம் என் பிர்ம்மகபாலத்திற்கு பிரிதிசெய்துக்கொள்ளுகிறேன் அதினால் அவர்களுக்கு யாதொருபாவமுமில்லை. இறந்தால் பேய்உருவங்களுமில்லையென்று அம்மன்வேண்டியவரங்களை யீந்தனள், அரசன்அவ்வரங்களைப்பெற்றுக்கொண்டு பின்பு தன்பாட்டனாரகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவினிடம்போய் முறையமிட அம்முறைக்கிரங்கிய பகவானனவர் என் பேரனாகிய கதிற்குலத்தினில்வந்த கண்மணியே, நீயாதொன்றுக்கும் அஞ்சாதே இச்சாபமானது உன்னைச்சாராமல் உன்கால்வழியில் வரும் சந்ததிகளுக்கு கலியில் அவர்களைத்தொடரும் ஆகிலும் இவர்களுக்கு எதாகிலும் ஓர் துன்பப்நேரிடில் அவர்கள்மனதில அரிகரியென்றுநினைத்தமாத்திரத்தில் யாவும்பரிகரித்து அவர்களைஒன்றும் அணுகாது, அவர்கள்கையில்தாங்கியவலையை சுசரிரமென்னும் என் சக்கரமாதலால் என்சக்கரமறிய கபாலமும்லந்த என்றவாக்கியப்படி இவ்வலையில்பிடித்து பிர்ம்மகபாலத்திற்கு ஆகுதிகொடுப்பதால் அவர்களுக்கு மறுஜென்மமுமில்லை என்றனர். இவ்வரங்களைப்பெற்றுக்

147062

கொண்டு ஏகச்சக்ரேஸ்வரனுக நிடதாபுரியை ஆண்டுவருகின்றனர், இது நிற்க,

ஐயா, யான்முன்புசொல்லிய மைநாகப்பருவதராஜனுக்கு சௌமன்னியமகாரிஷியின்மகள் சண்பகாவதியென்னும் ஓர்கன்னிகையை மணம்முடிப்பிக்க அவள்வயற்றில் தொண்ணூத்தியாறுபாலர்கள் பிரந்தனர், அவர்களுக்கு பரமசிவத்தினருளால் படவேடுகண்டத்தை அரசாட்சிசெய்துவைத்தநம்பிராஜனுடையகுமார்த்திகள் தொண்ணூத்தியாறுபெண்கள் பிறந்தனர். அப்பெண்களைகொண்டுவந்து இவர்களுக்கு மணமாலைச்சூட்டினுர்கள், இது நிற்க,

தொண்ணூத்தியாறுபேரில் தொணணூத்திநான்காவது சேரன் தொண்ணூத்தஞ்சாவது பாண்டியராஜன், தொண்ணூத்தியாருவது சோழராஜன், இந்தசோழராஜனல் ஆயிரத்தியெட்டு சிவஸ்த்தலங்கள் நிர்ம்மித்து துலங்கப்பட்டுவருகின்றது, இவருடையப்பிள்ளை மலைத்துவசபாண்டியராஜன், அவருடையப்பிள்ளை அதிவீரராமபாண்டியன், அவருடையப்பிள்ளை வீரதுவஜபாண்டியராஜன் இவரால் சிங்கபுரம் அரங்கநாதர் சந்நிதானமும், ஸ்ரீ அம்பாள் மலையனூர் பராசத்தியின் தேவஸ்தானத்தை மாணிக்கத்தாலமைத்தும் ஷெ மாணிக்கத்தால் ரதம்நடத்தியும் இருக்கின்றார்.

துவாபரயுகம்முடியும்வரையில் மாணிக்கரதம் நடத்தப்பட்டது இக்கலியுக துவக்கத்தில் அம்மன்உத்திரவின்படி ஆலயம் ரதம்முதல் யாவும் ஷேமத்திலிட்டு கற்பகரம் மந்திராடம் மகாமண்டப்ம்வரையில் அம்மன்உத்திரவால் கர்க்கோயிலாக ஏர்ப்படுத்திவிட்டு அரசன் மதுரைமாநகர்க்குச் சென்றனர், அவருடையபுத்திரன் உரையூருசோழராஜன் அவருடைய தபோபலத்திலுதித்த வல்லாளமகாராஜன், அவருடையசகோதரன் தேரூர்ந்தசோழன்வரையில் இக்கலியுகத்திலும் இப்பருவதவமுஷத்திலும் சிலகாலம் அரசுசெய்திருக்கின்றூர்கள், இதில்சிலருக்குச் சந்தேகம்நேரிடுமாகில் தக்கபடிகேழ்க்கலாம்.

ஐயா இப்புராணம் ஆதி கிரேதாயுகத்தில் ஸ்ரீ சன்னுகமுனியா ண்டவரால் திருவாய்மலர்ந்தருளிய சத்திப்புராணத்திலும் ஸ்ரீ பருவ தராஜபுராணத்திலும் சந்தேகமற விபரமாய் தெரிந்துகொள்ளலாம், ஐயா இதுவரையில் தாங்கள்கேட்டதற்கு என்னால்ஈன்றவரையில் இ ரண்டாவதுபாகம் கொஞ்சந்தான் முடிவுசெய்தேன், இனி மூன்று வதுபாகத்தில் போதலாகிரிவஸ்த்துவைப்பற்றி நீங்கள்கேட்டதற்கு சொல்லத்தொடங்கினேன்.

புராண கவி.

கோத்திரம் மாலேயாகும்
குலமது தத்துவமாகும்
ஆத்தியும் கொன்றைச்சூடும்
அரனும்நம் மருகனாகும்
பாத்திர உலகையாண்ட
பரவதநமசத் தோர்க்கே.

இவை தத்துவகுல கோத்திரசூத்திர பிரணவம் அரியும்படியான கவி.

ஸ்ரீ பரவதராஜன்சரித்திரம் இரண்டாவதுபாகம்
முற்றும்.

உ

கணபதிதுணை.



# தத்துவகுல ஞானபோதினி.

(மூன்றும் பாகம்.)

அய்யா! நம்மரபினராகிய தத்துவகுல சிகாமணிகளுக்கு யான் அறிவிக்கும்படியான விளம்பரம் யாதெனில்,—:

சென்ற 1912௵ பிப்ரவரி௴ 10௳ செஞ்சிதாலூக்கா ம-ா-ா-ஸ்ரீ, தாசில்தார் அவர்கள் 1. ம-ா-ா-ஸ்ரீ, டவுன் மேஸ்ரட்டு 2. ம-ா-ா-ஸ்ரீ, போலீஸ் இனிஸ்பெக்ட்டர் 3. ம-ா-ா-ஸ்ரீ, சப்இனிஸ்பெக்ட்டர் 4. மே மலையனூர் ம-ா-ா-ஸ்ரீ, வீ, மே-சநதிரஞ்தணைய னர் 5. இவர்கள் மலையனூர் அங்காளபரமேஸ்பரி ஆலையஸ்தானிகர்களாகிய தர்ம்மகர்த்தகளில் கே-வீரமுத்துபூஜாலி 1, ரு-பூங்காவனம்பூசாலி 2, வீ-சப்பாபதிபூஜாலி 3, வி-வேதாண்டம்பூஜாலி 4, வா-குப்பன்பூஜாலி 5, ரா-பண்டாரம்பூஜாலி 6, சி-பொன்னுசாலிபூஜாலி 7, இவர்கள் 7-பேரையும் மேற்படியார் ஐவரும், அம்மனுடைய உற்பவமும் உங்கள்ஜாதியின் வரலாற்றைப்பற்றியும் அதின்விபரம் ஆதியோடந்தமாப் கேழ்க்க நாங்கள ஆவல்கொண்டிருப்பதால் அதனை எங்களுக்கு விபரமாய்தெரியும்படி சொல்லவேண்டுமென்று கேழ்க, அதர்க்கு இந்த எழூ தர்ம்மகர்த்தர்களும் சுவாமி எங்களுக்குஒன்றும்தெரியவறாது எங்களில் அங்காளிதாசனென்னும் வீரப்பஉபாத்தியாயர்தான் இதர்க்குவிடைசொல்லுவாறென. மேற்படியார் அவரைவருவித்து இராஜசமுகத்தில்கேழ்க்க அவ்விடத்தில்சொன்ன கேழ்வியாவது.

அய்யா ஆகிலும்சொல்லுகிறேன்? ஆதி பருசத்தியின்புருணம் இதுவட்மொழியினுல் உண்டாகியது அதாணவேதத்தைச்சார்ந்த அங்காளிபுருணம் மேற்படி சத்திஉர்ப்பவசர்க்கம் ஒன்றுதான் பிரசங்கித்தேன், இன்னம் 17 - சர்க்கம் இருக்கின்றது மேற்படி பர்வதருஜபுருணம் பருவதருஜன் உர்ப்பவமுதல் மேற்படி அரசனுக்கு சாபம் வாய்த்தவரையில் ஐந்துநாள்பிரசிங்கித்தேன் அதனுல் அவர்கள்சொன்னதாவது அப்படி உங்கள்ஜாதி க்ஷத்திரியரென்றும், இரண்டாவது வகுப்பு பர்வதருஜ வம்மிஷமென்றும் நீர்சொன்னதுசரிதான். அம்மன் உங்கள்குலத்தில்உதித்து உங்களைகாப்பாற்றுகிறேனென்று அபயஸ்த்தம் தந்ததும்சரிதான் அப்படியிருக்க நீங்கள் லாகிரிவஸ்துஎன்னும் போதையினுல் ஏன் வீணுக அவ்வளவுபெருமையை கெடுத்துக்கொள்ளவேண்டும் அதுகளை நீக்கி சைவஆசாரகிரிகையும் நல்ல அந்தஸ்த்துக்கும் ஏன் வரக்கூடாதென்றும் மேற்படியார் சொன்னதின் பேரில் ம-வீரப்பவாத்தியாயர் சொன்னதாவது,

ம-வீரப்பஉபாத்தியாயரை ம-ா-ா-ஸ்ரீ,

மலையநூர் வீ. மே-சந்திரநாதனையனுரவர்கள்

## கேழ்க்கும் வினு.

---

ஆம் நீர் இதுவரையில்சொல்லிவந்த கேழ்விகளைக்கேட்டு மிகுந்தசந்தோஷமடைந்தேன் தவிர, யிவ்வளவுபெருமைதங்கிய ஜாதியென்றும் க்ஷத்திரியகுலமென புருணயுக்த்தப்படி சொன்னீரே யிவையாவும் சரியே, ஆகிலும் உமதுயினத்தவர் போதைதரும் லாகிரிவஸ்த்துக்களை அதிகமாகவிரும்புகின்றார்களே இதுதகுமா, உமதுபுருணத்தில் உங்கள்மரபினர் சாப்பிடலாமென்று ஏதாவதுசொல்கிறதா இவ்விததுர்ச்செய்கை செய்வதினுலல்லவோ ஈனமர்யிருக்கிறது யிதுகளின் விபர்ம்சொல்வீர்.

இவை மலையநூர் வீரப்பஉபாத்தியாயர்

## சொல் விடை.

இங்ஙனம் இதையாவரும் கவனித்து கேழ்ப்பீராக, இதுசிலகாலமாய் நடந்துவிட்டது அய்யா இவ்விததுர்ச்செய்கையென்னும் லாகிரிவஸ்த்தில் ஏதுவாயிருக்கினும் அவைகளை நாவில்நினைக்கினும் நரககபாடம் படிலென துரக்கும், மேற்படி சத்திபுராணத்தில் பருசத்தியாள் கூருவதைக்கேட்டால் குலைநடுங்குகிறது அதாவது,

புராண கவி,

கலிஉலகெல்லாம் நீங்கள் கனக்கவே அமுசமாகி
வொலிவுரும் பூமிதத்தம் உத்தமி ஈானேயாகும்
பலிகொளச் சமையம்வோங்கி பதிகெட்டாய் பரவபூமி
யிலியுமென் குலத்தோருண்டால் யிடேரிடார் என்னுணைதானே,

இதுவுமது,

பாதகம்தன்னி லொன்ருய் பதிந்தயென்னுநவம் தன்னே
காதலாய் உண்டபேர்க்கும் கருத்தினில் நினைத்தபேர்க்கும்
சீதரன் மார்பில்தங்கும் செந்திருபரந்து போவாள்
யேதுமற் றலேந்துபாரில் யிருப்பரென் னுணைதானே,

இதுவுமது,

எண்ணுமிந்த உயிர்களுக்கு படியளந்து பரமசிவ னீந்தசொத்தை
மண்ணினுரை தாசர்களுக் கீயாமல் புதைத்திடவே மனதிலுாணி
நண்ணுமந்தபொருளழியநான்முகனுமதுபடைத்தாங்நாட்டிலுண்போ
விண்ணவரா யிருந்தாலும் யேதுமற்று சிலநாளில் வெருங்கையாவர்.

இதை கவனிக்கவும்.

என்று பருசத்தியின் திருவாக்கால்யுரைசெய்திருப்பதால் இதை யாவருகிலும் உண்போர்கள் அடையும்கெதி என்னவென்று யென் வாக்கால்சொல்லப்போகிறேன், யிதை அவரவர்களும் கவனித்து இவ்விததுர்க்கிர்த்தியங்களே செய்யாமல் நாளுக்குநாள் நிவர்த்திசெய்து நம்குலத்தின் ஆசாரகிர்த்தியங்களே முன்னுக்குகொண்டுவர பிரார்த்திக்கின்றேன். இன்னம் அய்யா சேலம்ஜில்லா திருச்சங்கோடு தாலுக்கா ம-ா ா-ஸ்ரீ, தாசில்தாரும், ம-ா-ா-ஸ்ரீ, மேஸ்ரட்டாரும், ம-ா-ா-ஸ்ரீ, வக்கீலவர்களும் கேட்டகேள்வியைப்போல் செஞ்சிதாலுக்கா ம-ா-ா-ஸ்ரீ, மேஸ்ரட்டாரும், ம-ா-ா-ஸ்ரீ, தாசில்தார்அவர்களும், ம-ா-ா ஸ்ரீ, மலேயனூர் மணியம்-சந்திரநாதநயினர் அவர்களும், நம துகுலஜாதி வர்த்தமானத்தை ஆதியோடந்தமாய் கேழுக்கையில் அவ்விடம் யான்பாஷித்த சிலவார்த்தையில் புராணயிதிகாச சுருதி மூலமாய் யேர்ப்பட்ட நர்ச்சாட்சியாவது, ஸ்ரீ பருவதராஜவம்சம் இரண்டாவது வகுப்பு சூர்யகுலக்ஷத்திரியாளென ஏர்ப்படித்தி தீர்மாணம்பெற்றிருக்கின்றேன் அந்தசங்கையை தாங்கள்யாவரும் கேவலப்படுத்தாமல் கௌரவப்படுத்தக்கோருகிறேன்.

இதை அலட்சியமாகஎண்ணி இவ்வம்சத்தார்கள் பாபகிர்த்தியங்களே செய்யத்துணிவீராகில் மலேயனூர் அங்காளம்மன்ஆலய தர்ம

கர்த்தர்களாகிய கே-வீரமுத்துபூசாலி 1, கு-பூங்காவனம்பூசாலி 2 வீ-சபாபதிபூசாலி 3, வீ-வேதாண்டம்பூசாலி 4, வா-குப்பன்பூசாலி 5, ரா-பண்டாரம்பூசாலி 6, சி-பொன்னுசாமிபூசாலி 7, இந்த ஏழுதர்ம்மகர்த்தாக்களே அவரவர்களுக்குண்டாகிய கிளைபங்காளிகளை சரியானநடவடிக்கையில்கொண்டுவர திட்டம்செய்யவேண்டியது அதனை மீறிநடப்பவர்களை ரூபா ஐந்துக்கு குறையாமல் ஜாதிவழக்கப்படி அபராதம் விதிக்கும்படியாகவும் அதனைமீறி நடப்பவர்களை மா-ா-ஸ்ரீ வீ-ம்ம யிடம் ஒப்புக்கொடுத்து நிபந்தனைசெய்யும்படியாகவும் காணாமல் புசிப்பவர்களை கண்டுபிடித்து வொப்புக்கொடுத்தவருக்கு கால் ரூபாய் இனாம் கொடுக்கப்படுவதாகவும் தீர்மானம்செய்யலாம். இவ்விதம்தவறி கள்ளு சாறாயம் இன்னம் போதைலாகிரி உண்டவர்களை கோவிலுக்குள்பிரவேசிக்கக் கூடாததாகவும் அர்ச்சிக்கவும் தொடவுங்கூடாதுஎன சடினமானஜாதிகட்டுப்பாடு செய்யவும் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரியாய்வந்த நமது குலதெய்வமே என்னாணை என்பாத சாக்ஷியாய் இதைப்பொசிப்பவர்கள் ஈடேரமாட்டாரென்றதால் அவ்வாக்கியத்தை மீறிநடப்பவர்கள் யார் செழித்திருக்கின்றார்கள் மேலும் இதினாலே யிழிவும் கெட்டபேரும் விளங்குகிறதே தவிர யிதனை அதிகமாய் விரும்புவோர்கள் அனேகரை நாம் கண்முன்னாலேயே யாவையும்தோற்று வெறுங்கையராகி கெட்டலையபார்த்திருக்குரோமல்லவா, இதைநாமேன் அரியக்கூடாது.

அன்பர்களே யிதனை கவனித்து அவ்விதமே நன்னடக்கையில் வருவோமாகில் ஆதியில் ஈஸ்வரியானவள் கோடிதலைமரைவரையில் காத்து ரட்சிப்பேனென்ற வாக்கியம் பொய்ப்போகாதாகையால் மேல்க்கண்டவண்ணம் நீங்கள்யாவரும் ஒருங்குசேர்ந்து தவறி அன்னீதவழிபற்றி நடப்பவரை தண்டித்து யிக்கட்பாட்டை நிலைநிருத்துவீரென ஸ்ரீ அங்காளபரமேஸ்வரியின் திக்குநோக்கி தெண்டனிடுகிறேன். இங்ஙனம் இவ்வாலயத்தில் என்பிள்ளை பாவாடைராயனுக்கு முக்கியம் குடிகள் பிரார்த்தனைப்படி லாகிரிவஸ்துக்களை கொண்டு நைவேத்தியம் செய்வதால் அதனைபடைப்பதற்கு யாதொருதடையும் அம்மனால் சொல்லக்காண்கிலேன்.

## அம்மன்சொல்லிய கவி.

சித்தமும் கலங்காபற்றான் தேவியென் றெனைபூசித்தால்
குத்தம தகற்றிஉங்கள் கோத்திரமதையான் கார்ப்பேன்
பக்தராய் பணியுமிந்த பருவதன் அபிக்ஷத்தோர்கள்
வஸ்த்துவை பூசைசெய்து வகற்றிட மோக்ஷம்தானே.

என்று அம்மன் திருவாய் மலர்ந்தருளியிருக்குறாள் ஆகையால் அதனைவைத்து பூஜைசெய்துவிட்டு யாவருக்காகிலும் கொடுத்துவிடவும் யென்று கூறியிருக்கிறாள் இதையாவரும் மிகவும்கவனிக்கவும்,

இ தமயக்கத்தைத்தரும் போதைவஸ்த்துவை யுண்பதினாலல்லவோ இக்குலம்பிழிவடைகின்றது இன்னம் நான் அதிகமாகதெரிந்த மதியாளருக்கு சொல்லவேண்டிய அவசியமில்லை.

அய்யா அம்மன்திருவாய்மலர்ந்தருளிய வாக்கியப்படி மேற்கூரிய சாராயம் கள் இன்னம்போதையுள்ள லாகிரிவஸ்த்துவை புசிக்கக்கூடாதென்று இவ்வமுசத்தவர்களாகிய தத்துவகுலசிகாமணிகளுக்கு மேற்படி அம்மன்புராணசரித்திரத்தில் ஓர்சுரிதியில் சொல்லியிருப்பதால் அச்சுருதியை இவ்வமுசத்துவ குலசிகாமணிகளாகிய யாவரும் இரவும் பகலும் நன்றாய்கவனித்து இதில்கண்ட சுரிதியை ஒவ்வொருவரும் மனப்பாடமாக தெரிந்துகொண்டு துர்ச்செய்கைகளை செய்ய எண்ணங்கொள்ளாமல் எந்தவேளையும் நற்செய்கைகளைச் செய்யும்படி ஒவ்வொருவரும் அம்மனை மனதில்தியானம்செய்யவேண்டியது அப்படி நற்செய்கைசெய்யாமல் யாவரொருவர் துர்ச்செய்கைசெய்யுறார்களோ அவர்களை மேற்படி சுரிதியில் சொல்லியவண்ணம் இருபத்தோர் தலைமுறை வரையிலும் நரகவேதனையில் அகப்பட்டு அழிவார்களென அம்மன் புராணசுருதியில் கூறியிருப்பதால் இப்புராணவைபவத்தை நம்வமிஷத்தவர்களாகிய சிகாமணிகள் யாவரும் மனதில் தினந்தோறும இரவும்பகலும் ஸ்ரீ அங்காளபரமேஸ்பரி சுரிதியை மனதில் தியானிப்பவர்களுக்கு இருபத்தேழு தலைமுறைவரையிலும் நம்புத்திரபௌத்திரர்கள் யாவருக்கும் நரகவேதனையில்லாமல் சிவபத சுகம்பெருவார்களென ஸ்ரீ அங்காளபரமேஸ்பரி அம்மன் பாததூளியை எப்போதும்மறவாமல் துதிசெய்துவரக் கடவீர்கள் என்று ரொம்பவும் வந்தனத்துடன் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன், அநேக நமஸ்காரம்.

தத்துகுல ஞானபோதினி மூன்றாவதுபாகம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை,

இறை தத்துவகோத்திரவிளக்கப்

பட்டப்பெயர்.

# சிந்து வழிநடைப்பதம் இசை.

சீரானதத்துவக் கோத்திரப்பெருமையை
தென்புடனே கூறும் அங்காளி நீ
அன்புடனே வாரும் சீரான

பேரானபொன்னூட்டு மன்னர்பின் மையிநாக பிரியன்நுலகள ந்த சாது, அஞ்சா பெரும்புலிவாதாய் திருபுரக்காளியின்பின்பு காள த்தியென்றோது, நேரானசாத்தரா பிரியனூதியண்டனென்பார்பின் சேப்பிளையார்மீது, நல்ல நெஞ்சுப்பளிங்கர்பின் னூட்டுப்பிரியன்வார் த்தை நிஜபஞ்சனூயகன் சாது, கூரான அய்புறுபணிக்கன்றிளந்தா மணிக்கன்குணம் பெரியநாடன்மெய்போது, கோமளப்பிரியன்பின் ஏனடவான்காணும் கோலவாளப்பிரியன்சாது, கூருமுவ்வாறுதொ கைசேரும் வகைபாருஞ் சிவன்கோதைப்பரமாயி மனகூதைத் துலைத் தானுந்தினம், சீரான க

ஏதளவான்எமகிரி சூரியப்பிரியன் இயம்புங்கண்ணுயிரங்காணும் மனம் ஏங்காசோமன்னூடன் ஜெகதலப்பிரியன் லோகபிரியன் விஷ் ணுகர்ந்தான்பூணும் வேதுநாயகன் சங்கதிஆலோலன் சமுத்திரபாண் டிமாலையிட்டான் காணும், கூறுவேன்மஞ்சிதப்பிரியன் மதிகலைப் பிரி யன காசிபுரிநாடன்விதி தீர்த்தான் தோணும் மாதர்புகழாசுகலைபிரி யன் திக்கோட்டியெதிர்மாயன்கணபதி பூணும்குணமறியுமடக்குபாசி நாமேடோட்டி பொன்வலைமழுவோடந்தி யெய்யன்பூணும் தீதற்றுலக நாதன் ஈாடன்பரமானந்தம் சிறந்தபொன்முடிநாடன் காணும் மன தீரனும் நீலகண்டபிரியன் கார்த்திக்காண்டன் செப்புங்கார்த்திக்கே யந்தோணும் சேருமெண்ணூருதொகை கூரும்வகைபாருஞ் சிவன் தேவிப்பிரமாயியெனத் தாவித்துணையே நீதினம், சீரான. உ

பணிக்கன்காண்டான் களப்பாளன்சம் பராபணிக்கன்பாட்டு வாண்டன் பிரிதிலிங்கன்பாரும் நன்றாய்பாயுங்கூர்வேலொடித்தான் நாட்டுசாமன் நதிபாசி பகிர்விக்ரமசித்ரமொழிபேரும் மணிபரவகுரி சிசங்கேந்தி ஜெகதலப்பிரியன்மல்லன் கரையுருட்டான்கூறும்பொல்

லாமாய்கைவெட்டிவிளங்கன் தனிமாயன் வள்ளாளன் மனங்குளிர்ந்தா ப்பச்சைசீரும அணிசித்ரசேனப் பிரியன்செத்தி விழிசெயநாடன் வா ணுப்பிரியன் நல்லபேரும் அன்பானசெழுங்கோவைதகண்டச்சாத்ரா பிரியன் அறிவுகுளுந்தாபணிக்கன்நேரும் எலீயாள் அருள் செல்லப் பிள்ளையான் அண்ணமலைப்பிரியன் அழகு உண்ணுமுலைகூறும் பிணி பயந்துலேத்தருளாயத்தி சேனுடன்பிரியன் மாயைக்குண்டலிபேரும் நல்லபெருமையாங் காயஸ்திரீமல்லிகை யாலத்திபேசும் மாணிக்க தேவா சீரும் ஆதிபிஞ்சகன்சூடிய சந்திரன் கொக்கோட்டிபேர்பட் டன் கச்சிநகர்பாரும் பேருத்தொண்ணூரு தொகைசேரும் வகை பாருஞ் சிவன் பெண்ணுளுமையேசீ யெலைநண்ணுயாள்வாயேதினம் சீரான. ௩

பட்டநாயகன் நிலங்கார்த்தான் கஞ்சியப்பிரியன் பார்த்தரழுவ சேரன் பாண்டியநாடு பஞ்சபவகர்மம்துலேத்தாளும் பரமனைத்தொ ழுஞ்சோழன் பகர்கொல்லவெட்டான் மெய்பாடுங் கட்டழகானவங் காளி யானந்தியுமைகமலத்தாளினை சிரமேல்சூடும் சிந்தைகனிவாய் மல்லிகைமுல்லை பாரிசாதமுங்கோங்கு கனமாயர்ச்சித்தருள்தேடும் வெட்டிவேர்மருக்கொழுந்தையுஞ் சாற்றி மதுமாமிசம்வேண்டியதெ ல்லா மன்போடு தாருவெடித்தப்பிலாக்கதலிகனிகள் தேங்காயுமா விளக்கு மன்பாககொண்டாடும் அட்டியில்லாதருள் மிகதூபதீபமும் அழகாகயேற்றி துதிபாடும் ஆதிஜதீகபுராண மெய்க்கண்ட வீரப்ப தாசன் அவர்மொழிக்கேட்டொன்றுய்க்கூடும் அருமைப்பதம் பெரு மைப்புகழ்ந் துருமைத்தெரிகுரு வைத்தொழு அன்பாகியநாராய ணன் தென்பாய்துதி பாராயணன், சீரான. ச

வழிநடைப்பத இசை

முற்றிற்று.

———

சிவமயம்.

## தேவர்கள் மறுவுருவாகிற

### விருத்தம்.

குணமறிந்தோர்க்கடங்காமற் குதிக்கும்ராக்கதர்னர் குலங்களெல்லாம், நிணமிறைச்சிகரகஞ்சழ நெஞ்சமகிழ்ந்துணநரிகள் நிலத்தின்மீது, பிணமலைகளாய்க்குவிய பெரும்போரிடப்பரமன் பிரமன் மாலும், கணத்தில்மறு வுருவாகக்கடவதென்றாள் நல்லதெனக் கருதினரே.

### வேறு வண்ணத்தரு இசை.

தத்தநந்தனத்ததந தத்தநந்தனத்ததன
தத்தநந்தனத்ததனதானினு

அக்கணத்திற்கோபால விக்கினவிநாயகராய் அவதாரஞ்செய்து வந்தார் அன்புடன் அறுமுகன்வனக்குறவன் அழகுஞான மணிக்குறத்தி ஆனளே வள்ளியம்மைதென்புடன்-தன ௧

தக்கப்புகழ்தெய்வானை புஷ்பகந்தாவதி யென்னும்சசிநல்லுலவுகெங்குஞந்திரம் தர்மவமன்கெங்கு மன்னன் இந்திரன்ராமதீரதுரை தானுகிவந்தார் மிகதந்திரம்-தத் ௨

நல்லவுருமன்மதனும் வல்லப்புறுவாய் உலகநாயகிப்பதமுந்தொழுதேற்றினன் நம்பும் இடும்பத்துரையும் தென்புடன்கட்டாரிமல்லுநானே மிகுதீரனுனென்றுபோற்றினர்-தத் ௩

வல்லவீரபத்திரனும் நல்லவர் பாவாடையாகவந்தாநந்தியைப் பணிந்துவாழ்த்தினர் வண்டர் துடுக்கையடக்கிக்கொண்டருளும் பத்திரகாளி மயானருத்திரியெனப் போற்றினள்• தத் ௪

நந்திதூர்மஜனலிங்கம்சுந்தரயீசன் தாணடவனுகவந்து கூடினர்கள்நல்லவர் நம்பித்துதிப்பாரக்கன்பான துப்பிமுகன்பெரியாண்டவன் தானதைப்புகழ்ந்தார் கவிவல்லவர்-தத் ௫

### வேறு வண்ணத்தரு இசை

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

---

ஐயா, இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்,—

இப்புத்தகம் மலையனூர் ஸ்ரீ அங்காள பரமேஸ்பரி புராணம் மேற்படி ஆலயதர்மகர்த்தர்களாகிய கே-வீ-முத்துபூஜாலி 1, கு-பூங்காவனம்பூஜாலி 2, வீ-சபாபதிபூஜாலி 3, வி-வேதாண்டப்பூஜாலி 4, வா-குப்பன்பூஜாலி 5, ரா-பண்டாரம்பூஜாலி 6, சி-பொன்னுசாமி பூஜாலி 7, இவ்வேழுதர்ம்மகர்த்தர்களாலும் ம-ா-ா-ஸ்ரீ, செஞ்சி தாலுக்கா தாசில்தார் அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ, டவுன் மேஸ்ட்டாரவர்களும், ம-ா-ா-ஸ்ரீ, போலீஸ் இனிஸ்ப்பெக்ட்டர் அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ. சப்: இனிஸ்ப்பெக்ட்டர் அவர்களும், மே மலையனூர், ம-ா-ா-ஸ்ரீ, வீ, மே-சந்திரனுதனையனூர் அவர்களும் ஆக இவ்வைவர்கள் சகாயத்தாலும் இப்புத்தகம் அச்சிட்டு நிறைவேரியது.

இப்படிக்கு,

☞ மலையனூர் - வீரப்ப உபாத்தியாயர்.